**OS.166/2022 P.W.3-பழனியப்பன் த/பெ.பழனியப்பன் 07.08.2026**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு பணம் வசூல் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும் போது நான், தையல்நாயகி, கிருஷ்ணகுமார் மற்றும் விசாலாட்சி ஆகியோர் இருந்தோம். 04.12.2019 அன்று மொத்தம் ரூபாய் 21 லட்சத்தில் ரூ.9,55,000/- பணமாக கொடுத்தோம். மீதி தொகைக்கு ஏற்கனவே அவர் எழுதிக் கொடுத்திருந்த கடனுறுதி சீட்டு மற்றும் அடமான கடன் ஆகியவற்றை தவிர்த்து மொத்தம் ரூபாய் 21 லட்சம் எழுதி கொடுக்கப்பட்டது. அடமானம் வைக்கப்பட்டது 15.10.2012 ஆகும். ரூபாய் 3 லட்சத்திற்கு அடமானம் வைக்கப்பட்டது. 04.12.2019 அன்று என்ன கிழமை என்று ஞாபகமில்லை.

2. ரூ.9,55,000/-யை 500 ரூபாய் தாள்களாக கொடுக்கப்பட்டது. வாதியின் வீட்டின் பக்கத்தில் நான் குடியிருந்தேன். அவ்வபோது வாதியின் வீட்டிற்கு வந்து செல்வேன். தையல்நாயகி என் அத்தை ஆவார். பணம் வாங்கும்போது பிரதிவாதி 40 நிமிடம் அந்த வீட்டில் இருந்திருப்பார். என் தந்தை வழக்கறிஞராக சிட்லபாக்கத்தில் உள்ளார். மேற்படி தேதியில் ஒரே ஒரு கடனுறுதி சீட்டில் தான் கையெழுத்து போட்டார். 2012ல் ரூபாய் 3 லட்சத்திற்கு அடமானம் போட்டுவிட்டு மேற்கொண்டு 2019ல் ரூ.9,55,000/- பெற்றார் என்றால் சரிதான். அடமான கடன் ரூபாய் 3 லட்சத்திற்கு வட்டி கொடுத்துள்ளாரா என்றால் 2019 வரை வட்டி கொடுத்ததாக சொன்னார்கள். என் தந்தை மற்றும் எனது அத்தையின் தூண்டுதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இருந்து சாட்சி கையொப்பம் போட்டுக் கொடுத்தேன்.

<u>மறு விசாரணை</u>

இல்லை